**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.139/2024 |
| Deposition of Witness for | : | PW – 5 |
| Name and Age | : | ஜீவானந்தம் (வயது 59) |
| Father / Husband Name | : | முனுசாமி |
| Occupation | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Village | : | பஞ்சப்பள்ளி காவல் நிலையம் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 22.05.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s.355 BNSS. filed and allowd**

**PW– 5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பஞ்சப்பள்ளி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். வழக்கில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு புலன்விசாரணை அலுவலர் உதவி ஆய்வாளர் சபி அவர்களின் கையெழுத்து ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தெரியும். கடந்த 27.11.2022 அன்று பாலக்கோடு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று உதவி ஆய்வாளர் சபி அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முருகேசன், த/பெ. பொன்னப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி நிலைய குற்ற எண்.94/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324 –வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினமே வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பகல் 16.00மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் எல்லப்பன் மற்றும் ஏழுகுண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். **மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகஜர் ஆகியவை முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே 16.30மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 96 செ.மீ நீளமுள்ள தடி ஒன்றையும், 578 கிராம் எடைகொண்ட கல் ஒன்றையும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகஜர்**

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.22 17:40:17 +0530

**அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றிய பொருட்களை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **படிவம் –95 அ.சா.ஆ.8–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் முருகேசன், அருள்முருகன், சிவராஜ், அர்ஜீனன், சுகுமார், சீனிவாசம், மணி, எல்லப்பன் மற்றும் ஏழுகுண்டன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவத்தில் காயம் அடைந்த முருகேசன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.பாலசுதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சிகிச்சை பெற்ற நபர் மருத்துவ அறிவுரையை பின்பற்றாமல் சென்றதாக குறிப்பிட்டு காயம் குறித்த கருத்துரை வழங்க இயலாது என தெரிவித்துள்ளார். எதிரி பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. இத்துடன் புலன்விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி கொடுத்த புகாரின் பேரில் புகார்தார் மீது CC.No.132/2024 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி கொடுத்த வழக்கில் இருந்து தப்பிக்கவே பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. சரிவர விசாரணை செய்யாமல் இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.22 17:40:24 +0530

Judicial Magistrate,
Palacode.